**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரக்கோணம்.**

முன்னிலை: **செல்வி.அ.அமீனா, B.B.A., L.L.B (Hons).,**

**நீதித்துறை நடுவர் எண். 1 (மு.கூ.பொ),**

2026ம் ஆண்டு ஜீன் 19ம் நாள் வெள்ளிகிழமை

**C.C.No.623/2025**

**(CNR.No.TNRP09-004101-2024)**

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்,
அரக்கோணம் கிராமிய காவல் நிலையம்,
குற்ற எண்.337/2022. ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. சுரேஷ், (வயது–40),
த/பெ. சம்பத்,
எண்.124, TV ரூம் தெரு,
முள்வாய் கிராமம்,
அரக்கோணம் தாலுக்கா,
ராணிப்பேட்டை மாவட்டம்.

2. சம்பத், (வயது–62),
த/பெ. கந்தசாமி,
எண்.124, TV ரூம் தெரு,
முள்வாய் கிராமம்,
அரக்கோணம் தாலுக்கா,
ராணிப்பேட்டை மாவட்டம்.

3. இன்பவள்ளி, (வயது–59),
க/பெ. சம்பத்,
எண்.124, TV ரூம் தெரு,
முள்வாய் கிராமம்,
அரக்கோணம் தாலுக்கா,
ராணிப்பேட்டை மாவட்டம்.

4. பிரவின்குமார், (வயது–28),
க/பெ. சம்பத்,
எண்.124, TV ரூம் தெரு,
முள்வாய் கிராமம்,
அரக்கோணம் தாலுக்கா,
ராணிப்பேட்டை மாவட்டம். ... எதிரிகள்

இவ்வழக்கு 26.09.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 19.16.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் வைக்கவில்லை. இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

30.10.2022ம் தேதி சுமார் பகல் 03.15 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முள்வாய் கிராமத்தில் உள்ள சாட்சி 1 எழிலரசிக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த வீட்டு மனை பிரச்சனையில் இருந்த முன் விரோதம் காரணமாக சாட்சி 1ன் மாமனார் முருகேசன் என்பவர் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது, எதிரிகளாகிய நீர் அங்கு வந்து சத்தம் போட்டதாகவும், அதில் எதிரி சுரேஷ் சாட்சி 1 ன் மாமனார் முருகேசனை பார்த்து ங்கோத்தா தேவிடியா பையா இங்க ஏன்டா மரத்தை வெட்ர எனக்கூறி அசிங்கமாக திட்டியதாகவும், அதை தட்டி கேட்ட சாட்சி 1ன் தலைமுடியை பிடித்து இழுத்தும் நைட்டியை கிழித்தும் கையால் அடித்ததாகவும், அதை தடுக்க வந்த முருகேசனை அங்கு கீழே கடந்த கட்டையை எடுத்து தலை மீது அடித்ததாகவும், சண்டையை தடுக்க வந்த சாட்சி 1ன் கணவர் சதிஷ்குமாரை எதிரி பிரவீன்குமார் கையால் அடித்ததாகவும், எதிரி இன்பவள்ளி கீழே கிடந்த கல்லை எடுத்து சதிஷ்குமாரின் தலை மீது அடித்ததாகவும், எதிரி சம்பத் என்பவர் கீழே கிடந்த கட்டையை எடுத்து இனிமேல் யாராவது வந்து எங்க மரத்தை வெட்டினிங்கனா உங்களை இந்த கட்டையால் அடித்து கொலை செய்த விடுவேன் என மிரட்டியதாக இதச பிரிவு 294(b), 323, 324, 506(ii), 4 TNPHW ன் கீழ் அரசு தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் அனைத்து நகல்களும் எதிரிக்கு குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii), 4 TNPHW கீழ் முதல் நோக்கு தோன்றியதால் குவிமுச பிரிவு 240–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்தார். எதிரி குற்றத்தினை மறுத்தமையால் குவிமுச பிரிவு 242–ன் படி அரசு தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4. <u>**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் விவரம் பின்வருமாறு**</u>:–

அரசுதரப்பில் பட்டியல் சாட்சி–1 முதல் பட்டியல் சாட்சி–9 வரை சாட்சிகள் கொடுக்கப்பட்டு பட்டியல் சாட்சி–5 முதல் பட்டியல் சாட்சி–9 வரையிலானவர்கள் விசாரிக்காமல் விட்டொழிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக தலைமை காவலர் ராஜேஷ் பட்டியல் சாட்சி–10 ஆக சேர்க்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா5 வரை விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:-

(i) 30.10.2022ம் தேதி சுமார் பகல் 3.15 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முள்வாய் கிராமத்தில் உள்ள சாட்சி 30.10.2022ம் தேதி சுமார் பகல் 03.15 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முள்வாய் கிராமத்தில் உள்ள சாட்சி 1 எழிலரசிக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த வீட்டு மனை பிரச்சனையில் இருந்த முன் விரோதம் காரணமாக சாட்சி 1ன் மாமனார் முருகேசன் என்பவர் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது, எதிரிகளாகிய நீர் அங்கு வந்து சத்தம் போட்டதாகவும், அதில் எதிரி சுரேஷ் சாட்சி 1 ன் மாமனார் முருகேசனை பார்த்து ங்கோத்தா தேவிடியா பையா இங்க ஏன்டா மரத்தை வெட்ர எனக்கூறி அசிங்கமாக திட்டியதாகவும், அதை தட்டி கேட்ட சாட்சி 1ன் தலைமுடியை பிடித்து இழுத்தும் நைட்டியை கிழித்தும் கையால் அடித்ததாகவும், அதை தடுக்க வந்த முருகேசனை அங்கு கீழே கடந்த கட்டையை எடுத்து தலை மீது அடித்ததாகவும், சண்டையை தடுக்க வந்த சாட்சி 1ன் கணவர் சதிஷ்குமாரை எதிரி பிரவீன்குமார் கையால் அடித்ததாகவும், எதிரி இன்பவள்ளி கீழே கிடந்த கல்லை எடுத்து சதிஷ்குமாரின் தலை மீது அடித்ததாகவும், எதிரி சம்பத் என்பவர் கீழே கிடந்த கட்டையை எடுத்து இனிமேல் யாராவது வந்து எங்க மரத்தை வெட்டினிங்கனா உங்களை இந்த கட்டையால் அடித்து கொலை செய்த விடுவேன் என

மிரட்டினார்.அ.சா.1 எழிலரசி, அ.சா.2 முருகேசன், அ.சா.3சந்தோஷ்குமார் சம்பவத்தை நேரில் பார்த்தார்கள்.

(ii) சம்பவத்தில் காயமுற்ற பட்டியல் .அ.சா.1 எழிலரசி, அ.சா.2 முருகேசன், அ.சா.3சந்தோஷ்குமார் அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார்கள். அங்கு பணியில் இருந்த மருத்துவர் பட்டியல் சாட்சி–8 சோபனா அ.சா.1, அ.சா2, அ.சா3க்கு சிகிச்சை அளித்தார்.

(iii) பின்னர் 30.10.2022ம் தேதியன்று இரவு 9 மணிக்கு பட்டியல் சாட்சி–9 உதவி ஆய்வாளர் சீனிவாசலு என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அரக்கோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த புகார்தாரர் எழிலரசி என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலையம் அஜராகி அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.337/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) 4 TNPHW ன் கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர் எழிலரசியின் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iv) பிறகு வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பட்டியல் சாட்சி–9 உதவி ஆய்வாளர் சீனிவாசலு, 31.10.2022ம் தேதி காலை 8 மணிக்கு சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி–6 சுகன்யா மற்றும்

பட்டியல் சாட்சி-7 தர்மதுரை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் தயார் செய்தார்.

(v) பிறகு பட்டியல் சாட்சி 1 முதல் 7 வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் இல்லை.

(vii) பிறகு பட்டியல் சாட்சி-8 மருத்துவர் சோபனாவை விசாரணை செய்து அ.சா.2 முருகேசனுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என அ.சா.ஆ.6 விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். அ.சா.1 எழிலரசி, அ.சா.3 சந்தோஷ்குமார் மருத்துவமனையில் சிகிச்சை முடியாமல் மருத்துவமனையிர் தகவல் தெரிவிக்காமல் சென்றுவிட்டார்கள்.

(viii) பின்னர் விசாரணையில் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் முதல் நோக்கு தோன்றியதால், பட்டியல் சாட்சி-8 காவல் உதவி ஆய்வாளர் சீனிவாசலு விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b) கீழ் வினவிய போது சாட்சிகள் கூறுவது பொய் என்றும் பொய் வழக்கு என்றும் தெரிவித்தார். மேலும் எதிரிகள் தரப்பில்

சாட்சிகள் இல்லை என்று எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்**:–

எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) 4 TNPHW ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ?

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

09. குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்கும் சுமையானது அரசு தரப்பினை சார்ந்துள்ளது என்று இசாச சட்டப்பிரிவு 101 இன் கீழ் காணப்படுகிறது.

10. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுதரப்பில், எழிலரசி அ.சா.1 ஆகவும், முருகேசன் அ.சா.2 ஆகவும், சந்தோஷ்குமார் அ.சா.3 ஆகவும், மகேஷ் அ.சா.4 ஆகவும் மற்றும் தலைமை காவலர் ராஜேஷ் அ.சா.5 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர் எழிலரசியின் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4

ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், அ.சா.2 முருகேசனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறிப்பிடவில்லை.

11. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 எழிலரசி தனது முதன்மை சாட்சியத்தில் "தான் முள்வாயில் வசித்து வருவதாகவும், 2022ம் வருடம் மாலை 3.15 மணிக்கு எனதுமாமனார் எங்களடைய இடத்தில் இருந்த மரத்தை வெட்டிக் கொண்டு இருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் என்னையும், என் மாமனார் மற்றும் என் கணவரை தாக்கினார்கள், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தேன். தற்போது எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 எழிலரசி எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

12. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.சா.2 முருகேசன் தனது முதன்மை சாட்சியத்தில் " தான் முள்வாயில் வசித்து வருவதாகவும், 2022ம் வருடம் மாலை 3.15 மணிக்கு தான் எங்களுடைய இடத்தில் இருந்த மரத்தை வெட்டிக் கொண்டு இருந்த போது

அடையாளம் தெரியாத நபர்கள் என்னையும், என் மகன் மற்றும் என் மருமகளை தாக்கினார்கள், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தோம். தற்போது எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 முருகேசன் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.சா.3 சந்தோஷ்குமார் தனது முதன்மை சாட்சியத்தில் " தான் முள்வாயில் வசித்து வருவதாகவும், அ.சா.1 எழிலரசி தனது மனைவி என்றும் 2022ம் வருடம் மாலை 3.15 மணிக்கு தன்னுடைய தகப்பனார் எங்களுடைய இடத்தில் இருந்த மரத்தை வெட்டிக் கொண்டு இருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் என்னையும், என் மனைவி மற்றும் என் தகப்பனாரை தாக்கினார்கள், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தோம். தற்போது எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 சந்தோஷ்குமார் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக

கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

14. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியான அ.சா.4 மகேஷ் தனது முதன்மை சாட்சியத்தில் " தான் முள்வாயில் வசித்து வருவதாகவும், அ.சா.1 எழிலரசி தனது சகோதரின் மனைவி என்றும் 2022ம் வருடம் மாலை 3.15 மணிக்கு தனது தகப்பனார் எங்களுடைய இடத்தில் இருந்த மரத்தை வெட்டிக் கொண்டு இருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தனது தகப்பனார், சகோதரர் மற்றும் அவரது மனைவியை தாக்கினார்கள், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தோம். தற்போது எனக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 மகேஷ் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

15. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் தலைமை காவலர் அ.சா.5 சாட்சியத்தை மட்டுமே வைத்துக் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக கருத முடியாது.

16. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து நோக்குமிடத்து இந்த வழக்கில் அரசு தரப்பால் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராகவும், எதிரிகள் அசிங்கமாக பேசி தாக்கியதாக அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காததாலும், மேலும் அ.சா.2 முதல் அ.சா.4 வரை வழக்கின் புகாருக்கோ அல்லது குற்ற இறுதி அறிக்கைக்கோ ஒத்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், தலைமை காவலர் அ.சா.5 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதால் அவரின் சாட்சியத்தினை மட்டும் வைத்துக் கொண்டு எதிரி குற்றம் புரிந்ததாக கருத இயலாது என்பதாலும், அரசு தரப்பு வழக்கினை உறுதியூட்டும் வகையில் சாட்சிகள் இல்லாததாலும், எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) 4 TNPHW கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியம், சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, மேற்சொன்ன காரணங்களால் எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) 4 TNPHW கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம், சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை

என்று குவிமுச பிரிவு 248(1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் சொத்துக்கள் பற்றிய உத்தரவு எதுவும் பறிப்பிக்கப்படவில்லை. எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணையம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க தட்டச்சருக்கு உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜீன் 19ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),
அரக்கோணம்.

**<u>இணைப்பு</u>**:

1. **<u>அரசுதரப்பு சாட்சிகள் பட்டியல்</u>**:

| | |
|---|---|
| அ.சா.1 | எழிலரசி. |
| அ.சா.2 | முருகேசன். |
| அ.சா.3 | சந்தோஷ்குமார். |
| அ.சா.4 | மகேஷ் |
| அ.சா.5 | ராஜேஷ்(தலைமை காவலர்) |

2. **<u>அரசுதரப்பு சான்றாவணங்கள் பட்டியல்</u>**:

| **Exhibits** | **Date** | **Description of Documents** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 30.10.2022 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 எழிலரசியின் கையொப்பம். |
| அ.சா.ஆ.2 | 30.10.2022 | புகார் வாக்குமூலம். |
| அ.சா.ஆ.3 | 30.10.2022 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.4 | 31.10.2022 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.5 | 31.10.2022 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.6 | 30.10.2022 | அ.சா.2ன் முருகேசனின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. |

3. **அரசுதரப்பில் சான்று பொருள்**:– இந்த வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள்:-**

இல்லை.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC) ,
அரக்கோணம்.

**நகல்கள்:-**

1.மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், இராணிப்பேட்டை மாவட்டம்.

2.அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2.

3.காவல் ஆய்வாளர், அரக்கோணம் கிராமிய காவல் நிலையம்.

**குறிப்பு:-**

1. அரசுதரப்பில் சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.
2. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்தார்.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),
அரக்கோணம்.